## சுங்க உத்தியோகத்தர்களது வெகுமதி நிதியம் - 2014

சுங்க உத்தியோகத்தர்களது வெகுமதி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்தாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சுங்க உத்தியோகத்தர்களது வெகுமதி நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

‘‘2.5 சதவீத வெகுமதி நிதியம்’’ என தலைப்பிட்ட சுங்க உத்தியோகத்தர்களது வெகுமதி நிதியத்தின் உப நிதியத்தில் ரூபா 28,656,305 தொகை மீளாய்வாண்டின் போது செலவளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிதியத்திலிருந்து செலவினத்தின் குறித்துரைக்கப்பட்ட வரையறை கணக்கீட்டுக் கொள்கைகளில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெகுமதி நிதியத்தின் செலவினங்களாக ரூபா 569,279,165 கூட்டுத்தொகையான வழங்கப்படாத ரொக்கப்பரிசுகள் கணக்கிடப்பட்டிருந்த போதிலும் இது பொறுப்புக்களாக வெளிக்காட்டப்படாமல் திறைசேரி வைப்புக் கணக்கிற்கு சீராக்கம் செய்யப்பட்டு ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 5,282,713 கூட்டுத்தொகையான 03 செலுத்தப்படாத விலைப்பட்டியல்களின் பெறுமதி இரு தடவைகள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்ததனால் அந்த தொகையினால் நிதிக்கூற்றுக்களில் செலவினங்கள் மற்றும் பொறுப்புக்கள் அதிகரித்திருந்தது.

#### 2.2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

உத்தியோகத்தர்களின் பெற்றுக்கொள்ளப்படாத ரூபா 26,429,947 கூட்டுத்தொகையான ரொக்கப்பரிசுகளின் மீள் கொடுப்பனவுக்காக ஒழுங்கான முறைமையொன்றை கடைப்பிடிப்பதற்கு பதிலாக பல வருடங்களாக ‘‘மீள் வைப்பு வெகுமதி கணக்கு’’ என பெயரிடப்பட்ட கணக்கொன்றிற்கு செலவு வைக்கப்பட்டு மீதி முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு மிகையான ரூபா 36,526,769 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 115,741,700 ஆகும். இதன்படி மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 79,214,931 ஆல் அல்லது 68.44 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் மொத்த செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 72,682,856 ஆல் அல்லது 5.17 சதவீதத்தால் குறைவடைந்திருந்த போதிலும், மொத்த வருமானம் ரூபா 151,897,787

ஆல் அல்லது 9.98 சதவீதத்தால் குறைவடைந்தமை இந்த மிகையின் குறைவிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 03 ஆண்டுகளுக்குரிய நிதியத்தின் வருமானம், செலவினம் மற்றும் தேறிய செயற்பாட்டு விளைவுகள் என்பவற்றின் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | வருமானம் | செலவினம் | | | | மொத்த செலவினம் | மிகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர் களுக்குக் கொடுப்பனவு | ஒற்றர்களுக்குக் கொடுப்பனவு | வரி, உள்நாட்டு இறைவரி திணைக்களம் | ஏனைய செலவினம் | | |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2011 | 873,979,003 | 574,047,509 | 106,080,370 | 33,927,845 | 102,229,782 | 816,285,506 | 57,693,497 |
| 2012 | 973,210,594 | 694,361,096 | 128,208,276 | 42,779,776 | 60,262,398 | 925,611,546 | 47,599,048 |
| 2013 | 1,522,699,798 | 1,146,769,044 | 121,281,124 | 64,157,056 | 74,750,874 | 1,406,958,098 | 115,741,700 |
| 2014 | 1,370,802,011 | 1,025,591,909 | 117,310,035 | 126,095,842 | 65,277,456 | 1,334,275,242 | 36,526,769 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மீளாய்வாண்டின் போது உத்தியோகத்தர்களிற்கு மேற்கொள்ளப்பட்ட வெகுமதிகளின் கொடுப்பனவுகள் ரூபா 121,177,135 ஆல் அல்லது 10.57 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) 2011, 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 680 மில்லியன், ரூபா 822 மில்லியன், ரூபா 1,268 மில்லியன் மற்றும் ரூபா 1,143 மில்லியன் என்பவற்றை உள்ளடக்குகின்ற கூட்டுமொத்த தொகையான ரூபா 3,913 மில்லியன் உத்தியோகத்தர்கள் மற்றும் ஒற்றர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 3,441 மில்லியன் கூட்டுத்தொகை அல்லது 87.94 சதவீதம் உத்தியோகத்தர்களுக்கு வெகுமதிகளாக செலுத்தப்பட்டிருந்தது. வெகுமதி நிதியத்தின் வருமானம் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே 56 சதவீதத்தால் மற்றும் 41 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளும் முறையே 65 சதவீதத்தால் மற்றும் 48 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(இ) இலங்கை சுங்கத்தினால் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனையால் பெறப்பட்ட வருமானம் மற்றும் பல்வேறு சுங்க தவறுகளுக்கான தண்டப்பணம் என்பவற்றில் பாரிய பணத்தொகை வெகுமதிகளாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த வருமானத்தில் 30 சதவீதம் மாத்திரம் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

### 4.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

சுங்கத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் கீழ் மீளாய்வாண்டின் எரிபொருள் செலவினத்திற்காக திரண்ட நிதியத்திலிருந்து ரூபா 40,000,000 நிதியேற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள போது அதற்கு மேலதிகமாக வெகுமதி நிதியத்திலிருந்தும் ரூபா 36,845,912 தொகை எரிபொருளுக்காக செலவளிக்கப்பட்டிருந்தது.

## 4.3 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கோரப்படாத வெகுமதிகளுடன் தொடர்புடைய விபரங்களை மீள் வைப்பு பதிவேட்டில் பதிவு செய்கையில் வேறு எண்களின் கீழ் விபரங்களை பதிதல், கொடுப்பனவு திகதியை குறிப்பிடத் தவறுதல், பதவிநிலை உத்தியோகத்தரால் பல சந்தர்ப்பங்களில் கையொப்பமிடத் தவறுதல், பக்க இலக்கங்களை குறிப்பிடத் தவறுதல் மற்றும் ஆவணத்தின் பக்கங்களை பிரித்தெடுத்த சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றமை போன்ற நலிவுகள் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2014 ஜனவரி 01 இல் உள்ளவாறு இருந்த செலுத்தப்படாத விலைப்பட்டியல்களுக்கான கொடுப்பனவுகள் பூர்த்தியடைவதற்கு முன்னர் 2014 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய விலைப்பட்டியல்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் முன்னைய ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 34,690,513 கூட்டுத்தொகையான 15 விலைப்பட்டியல்களுக்கான கொடுப்பனவு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன்படி நிதியத்தின் கொடுப்பனவுகள் தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட முறையொன்று கடைப்பிடிக்கப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பிஎவ்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருந்தபோதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் கிட்டத்தட்ட 04 மாதகால தாமதத்தின் பின்னர் 2015 மே 25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பிஎவ்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், வருடாந்த பாதீடு அதற்கு முன்னைய ஆண்டின் செப்தெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 07 செலவின உருப்படிகள் தொடர்பாக பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கு இடையே 36 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான விலகல் நிலவியதுடன் 2 வருமான உருப்படிகள் தொடர்பாக பாதீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமானத்திற்கு இடையே 29 சதவீதத்திலிருந்து 70 சதவீதம் வரையான விலகல் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

------------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது

(ஆ) கணக்கீடு
(ஆ) நிதியக் கட்டுப்பாடு